**DEPOSITION OF WITNESS**

(ChapterXXIII Code of Criminal Procedure)

**-----------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,No.I, PERAMBALUR**

**CC.No.113/2011**

**Date : 22.10.2024**

**PW5 அப்துல் நாசர் த/பெ. அப்துல் சமத்**

**4வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா. 1 அப்துல் சமீல் எனக்கு சித்தப்பா உறவு முறை. போலீஸார் என்னை தனிப்பட்ட முறையில் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள் தேதி நினைவில்லை. அ.சா. 1 தற்போது என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். போலீஸார் விசாரிக்க என் வீட்டிற்கு வந்தபோது அ.சா. 1 போலீஸாரை அழைத்துவந்தாரா என்றால் இல்லை, போலீஸார் மட்டும் வந்தார்கள். பட்டா மாறிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் அ.சா. 1 சொல்லித்தான் தெரியும் என்றாலும் சரிதான். போலீஸ் என்னை விசாரிப்பதற்கு முன்பே அ.சா. 1 பட்டா மாற்றப்பட்ட விவரத்தை என்னிடம் சொன்னார்.

புகார் கொடுத்த விவரம் தெரியும். புகார் கொடுக்க அ.சா. 1 –வுடன் செல்லவில்லை. இதற்கு முன்பு முதல்விசாரணை சாட்சியம் அளித்த தேதி ஞாபகமில்லை. பட்டா மாற்றப்பட்ட விவரம் எனக்கு ்நேரடியாக தெரியாது என்றாலும், அ.சா. 1 உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க 4வது எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4வது எதிரிக்கும், இந்த

வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.